# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்

## வரி நிர்வாக கணனி முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விசேட கணக்காய்வு அறிக்கை

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

## உள்ளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | நிறைவேற்றுப் பொழிப்பு | 17 |
| 2 | கணக்காய்வு அறிக்கை வழங்கலின் பின்னணியும் அதன் தன்மையும் | 18 |
| 3 | பின்பற்றப்பட்ட நடைமுறைகள் | 18 |
| 3.1 | பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பரீட்சித்தல் | |
| 3.2 | ஏனைய பரிசோதனைகள | 19 |
| 4 | விடயப்பரப்பை வரையறுத்தல் | 19 |
| 5 | வரி நிர்வாக கணனி முறைமை செயற்பாட்டை அறிமுகப்படுத்தல். | 20 |
| 6 | 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அறிக்கை அடிப்படையில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல் இடைநிறுத்தப்பட்மையால் ஏற்பட்ட தாக்கம் | 22 |
| 7 | முறைமைகளும் பலவீனங்களும் | 25 |
| 8 | பரிந்துரைகள் | 26 |
| 9 | முடிவு | 27 |
| 10 | பின்னிணைப்பு | 45-75 |

அட்டவணை - உள்ளடக்கம் பக்கம்


| அட்டவணை | | பக்கம் |
|---|---|---|
| 01 | அறவிடப்பட்ட / தீர்வு செய்யப்படாத VAT மற்றும் NBT நிலுவை வரி மீதி | 24 |
| 02 | அறவிடப்பட்ட / தீர்வு செய்யப்படாத VAT மற்றும் NBT நிலுவை வரி மீதியின் பேரிலான கணக்கிடப்பட்ட தண்டப்பணம் | 25 |

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்**
**வரி நிர்வாக கணனி முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விசேட கணக்காய்வு அறிக்கை**

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கை அரச வருமானம் வரி மற்றும் வரியல்லாத வருமானத்தையும் கொண்டுள்ளதுடன் வரி வருமானத்தை நிர்வகிக்கும் பொறுப்பை கொண்ட தரப்பொன்றாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை கூறலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வரி வருமானத்தில் 65 சதவீமான அளவு நேரில் வரி வருமானமாக இருப்பதுடன் அந்நேரில் வரியில் VAT மற்றும் NBT வரி வருமானத்திற்காக கூடியளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆதலால் VAT மற்றும் NBT வரியினைச் செலுத்துவோர் வரிக் கொடுப்பனவினை தவிர்ப்புச் செய்தால் அதன் மூலம் அரசிற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் குறைவடைவதை தவிர்ப்பதற்கு முடியாது. ஆதலால் கூடிய வரி வருமானத்தை அரசிற்கு ஈட்டிக் கொள்வது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் அதனை நிறைவேற்றும் நோக்கில் அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் வேலைத்திட்டமொன்று 2002 ஆம் ஆண்டிலிருந்து 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த சுய அறிக்கை வழங்கல் மூலம் தவிர்ப்புச் செய்யப்பட்டுள்ள வரியொன்றாகையால் அது தொடர்பாக தகவல்களை அறிக்கையிடுதல், நிலுவை வரி அடிப்படையில் தண்டப் பணத்தை விதித்தல், கணனி முறைமையில் நிலுவை வரி காண்பித்தல் போன்ற முக்கியமான பல செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதுடன், 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இடைநிறுத்தி அச்செயற்பாட்டை உத்தியோகத்தர்கள் (Manually) ஊடாக மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி சுய முறைமை இடைநிறுத்தப்பட்ட காரணத்தினால் 2015 திசெம்பர் 31 இல உள்ளவாறு VAT மற்றும் NBT வரிகளிலிருந்து அறவிடுவதற்கும் தீர்வு செய்வதற்கும் ரூபா 15,283 பில்லியன் வரி மீதியொன்றும் அவ் வரி மீதி அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் கணக்காய்வின் மதிப்பீட்டின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 9,237 மில்லியன் என இந்த அறிக்கைகயில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இம்முறைமையினுள் சிறிய பெறுமதியுடன் கூடிய நிலுவை வரி மீதிகளும் பாரிய எண்ணிக்கையாக காணப்பட்டதால் ரூபா 1,000 இனை கூடிய பெறுமதியான நிலுவை வரி மீதிகள் மாத்திரம் இந்த அறிக்கை தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டது.

## 2. கணக்காய்வு அறிக்கை வழங்கலின் பின்னணியும் அதன் தன்மையும்

பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (NBT) என்பன உரிய தரப்பினரால் குறித்துரைக்கப்பட்ட திகதியில் செலுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்களின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமுள்ள வரி நிர்வாக தகவல் முறைமை (Legacy System) மூலம் தன்னியக்க மதிப்பீட்டு அறிக்கை நடைமுறை 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டது. அதன் போது இனங்காணப்பட்ட நிலுவை வரி உரிய சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடும் இயலுமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் காணப்பட்டது. எனினும் திணைக்களத்தனால் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் செயற்பாடு 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பமாகும் வரி காலப்பகுதியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட காரணத்தினால் குறித்த அறிக்கையின் பேரில் வரித் தொகை (Tax on Return) செலுத்தியுள்ள வரியிருப்பாளர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. அவ்வாறு அறவிடப்படாத 31,586 நிலுவை வரி மீதிகள் அளவிலான எண்ணிக்கையொன்று வரி நிர்வாக தகவல் முறைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் என்னால் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 3. பின்பற்றப்பட்ட நடைமுறைகள்

பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

### 3.1 பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பரீட்சித்தல்

3.1.1 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்கள்

3.1.2 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்கள்

3.1.3 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி வரிச் சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்கள்

3.1.4 பெறுமதி சேர் வரி அடிப்படை தொடர்பான திணைக்கள கைநூல்

3.1.5 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனி முறைமை ஊடாக தயாரித்து உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணனி மென் பிரதியில் உள்ளடக்கப்பட்ட நிலுவை வரி மீதிகள் தொடர்பான தகவல்கள்

3.1.6 கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் நிலுவை வரி அறிக்கை

**3.2 ஏனைய பரிசோதனைகள்**

ஆவணங்கள் பரிசோதனைக்கு மேலதிகமாக பின்வரும் ஏனைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

3.2.1 வரி செலுத்துபர்களால் வரி அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் பணக் கொடுப்பனவு, வரி செலுத்துபர்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல், தண்டம் விதித்தல் மற்றும் நிலுவை வரியாக அறிக்கையிடல் போன்ற விடயங்கள், வரி நிர்வாக தகவல் முறைமையுடன் அண்மித்து மேற்கொண்ட முறை தொடர்பாக கட்டுப்பாட்டு பரிசோதனை மேற்கொள்ளல்

3.2.2 உரிய சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்களின் பேரில் தரவுப் பகுப்பாய்வு செய்து கணக்கிடல் செய்தல்

3.2.3 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி கணனி முறைமை பயன்பாட்டிற்காக தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்

**4. விடயப்பரப்பை வரையறுத்தல்**

இவ்வறிக்கைகளில் எழுந்த அவதானிப்புக்கள் மூலம் தீர்மானத்திற்கு வருதல் எனது விடயப் பரப்பில் மேலே காண்பிக்கப்படுகின்ற வரையரைகளுக்கு உட்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

4.1 வரி நிர்வாக முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றுதல் 2012 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்ற 2017 ஆம் ஆண்டளவில் மாற்றங்கள் செய்யப்பட்டு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமை.

4.2 கணனி நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றுதல் தொடர்பாக 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதிய PUR/D/IR/INFO/17/58 ஆம் இலக்க தகவல் கோரல் கடிதத்தில் விசாரிக்கப்பட்ட தகவல்கள் திணைக்களத்தினால் 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை போதியளவில் இல்லாமை மற்றும் விடயத்தை அடிப்படையாக கொண்டும் இல்லாதிருந்தமை (பின்னிணைப்பு – 1 )

4.3 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அறிக்கையின் பேரில் VAT மற்றும் NBT செலுத்தப்படாத நிலுவை வரி மீதிகள் தொடர்பான அறிக்கையொன்று கணனி முறைமையூடாக நேரடியாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் போதியளவு வசதிகள் மற்றும் வழிகாட்டல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படாமை.

4.4 திணைக்களத்தினால் கணனி முறைமை ஊடாக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு வழங்கப்பட்ட கணனி மென் பிரதியிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பேரில் இவ்விசேட கணக்காய்வு பரிசோதனை மேற்கொண்டமை மற்றும் 2016 திசெம்பர் 27 ஆந் திகதிய PUR/D/IR/INFO/2016/65 ஆம் இலக்க தகவல் கோரல் கடிதத்தில் வேண்டப்பட்ட அத்தகவல்களை வழங்குவதற்காக திணைக்களத்தினால் 2017 மே 15 ஆந் திகதி வரை தாமதித்தமை மற்றும் அவ்வாறு தகவல்களை வழங்கியதன் பின்னர் நிலுவை வரி மீதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வறிக்கையில் மேவுகை செய்யப்படாமை (பின்னிணைப்பு – 2, 3)

## 5. வரி நிர்வாக கணனி முறைமை செயற்பாட்டை அறிமுகப்படுத்தல். (Legacy System)

5.1 உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சேகரிக்கும் வரி வருமானம் ஒட்டுமொத்த அரச வருமானத்திலிருந்து 37 சதவீதமாக இருந்ததுடன் வரி வருமானத்தில் 55 சதவீதம் மற்றும் 9 சதவீதம் முறையே VAT மற்றும் NBT வரிகளுக்கு உரித்தாகின்றது. மிக முக்கியத்துவத்தின் கூடிய இவ்வரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்வதற்காக அறிக்கையின் பேரில் (Tax on Return) நிலுவை வரி காணப்படுகையில் சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் வரி நிர்வாக தகவல்கள் முறைமையொன்று (Legacy System) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டது. இச்செயற்பாட்டிற்காக பதிவுசெய்யப்பட்ட வரிசெலுத்துபவர்கள், வரி கோவைகளை பராமரிக்கும் தலைமை அலுவலகத்தின் பிரிவுகள், தரவு தயாரித்தல் மற்றும் வருமான நிர்வாக பிரிவு (DPRAU), கணனி அபிவிருத்தி பிரிவு (CDU) வரி சேகரிக்கும் வங்கி மற்றும் சுங்கத் திணைக்களம் தொடர்புபடுகின்றது. இம் முறைமை மூலம் VAT மற்றும் NBT வரி வகைகளில் உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகளின் பேரில் வரி நிர்வகிக்கப்படுவதுடன் இறக்குமதி மற்றும் நிதி சேவைகளின் படி வரி இம்முறைமைகள் மூலம் நிர்வகிக்கப்படுவதில்லை.

5.2 இம்முறைமை மூலம் நிர்வகிக்கப்படும் மேற்குறித்த வரி வகைகளில் நிலுவை வரி மீதிகள் Legacy காணப்படுகையில் முறைமை மூலம் மதிப்பீட்டு அறிக்கை சுயமாக வரி செலுத்துபவர்களுக்கு வழங்கப்படும். (பின்னிணைப்பு – 4 ) மேலும் முறைமை ஊடாக வரி அறிக்கை தொடர்பான தரவுகளை உள்ளடக்குதல், கொடுப்பனவு தொடர்பான தகவலகளை நாளதுவரையாக்குதல், மதிப்பீட்டு அறிவித்தல்களை வழங்குதல், கொடுப்பனவு தாமதத்தின் பேரில் தண்டப்பணம் கணக்கிடல், நாட்குறிப்பு மாற்றல்கள் மற்றும் கொடுப்பனவு மாற்றல்கள், சுங்க தகவல்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றது.

5.3 VAT மற்றும் NBT வரி செலுத்துபவர்கள் வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் (பின்னிணைப்பு – 5, 6 ) வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின் தரவு தயாரிப்பதற்கு மற்றும் வருமான நிர்வாக பிரிவினால் முறைமைக்கு தகவல்களை உட்செலுத்துவதற்காக Data Login Number (DLN) வழங்குவது இடம்பெறுவதுடன், அதன் பின்னர் குறித்த காலப்பகுதிக்காக வரிசெலுத்துபவர் செலுத்த வேண்டிய வரி குறிப்பிடப்பட்டு கோவை நாளதுவரையாக்கப்படும்.

வரி செலுத்துபவர்களால் வரி செலுத்த வேண்டிய இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் (பின்னிணைப்பு – 7, 8 ) வங்கி ஊடாக பணம் செலுத்தப்படுவதுடன் செலுத்திய வரி விபரங்களின் மென் பிரதி வங்கியால் நாளாந்தம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது. கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தரவுத் தயாரிப்பு வருமான நிர்வாகப் பிரிவினால் தகவல்களை உட்செலுத்துவதற்குரிய Data Login Number (DLN) வழங்கல் இடம்பெறுவதுடன், கணனி அபிவிருத்தி பிரிவில் நிர்வாக தகவல் முறைமையினுள் உரிய காலப்பகுதிக்காக செலுத்துபவரின் கொடுப்பனவில் பதிவு செய்யப்பட்டு கோவை நாளதுவரையாக்கப்படும்.

மேலும் சுங்கத் திணைக்களத்தினால் வர செலுத்துபவர்களுக்குரிய தகவல்களின் மென் பிரதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் அத்தரவுகளும் கணனி தகவல் முறைமை ஊடாக நாளதுவரையாக்கப்படும்.

5.4 கணனி முறைமைக்கு உள்ளடக்கப்பட்ட வரி அறிக்கை தகவல்கள், கொடுப்பனவு தகவல்கள் மற்றும் சுங்க தகவல்கள் (வரி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இறக்குமதி தொடர்பான விபரங்கள் உறுதிப்படுத்துவதற்கு) கணனி முறைமையில் செயற்பாட்டு உட்பட்டிருந்த செலுத்துவர்களினால் அறிக்கையில் குறிப்பிப்பட்டுள்ள

வரித் தொகையை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதா என பொறியியல் ரீதியில் பரீட்சிக்கப்படுகின்றது. அவ்வாறு பரீசிக்கப்பட்டு மேலும் செலுத்த வேண்டிய நிலுவை வரி மீதியொன்று காணப்பட்டால் கணனி முறைமை மூலம் வரி செலுத்துபவருக்கு சுயமாக வரி மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்கப்படும். அவ்வாறு பரீட்சிக்கப்பட்டு மேலும் செலுத்த வேண்டிய நிலுவை வரி காணப்பட்டால் கணனி முறைமை மூலம் வரி செலுத்துபவர்களுக்கு சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படும். அவ்வாறு வழங்கலில் பின்வரும் இணக்கப்பாடுகள் ஏற்படுகின்றன.

- அறிக்கை அடிப்படையில் நிலுவை வரி காணப்படும் சகல VAT மற்றும் NBT வரி மீதிகளுக்காக வரியிருப்பாளர்களுக்கு மதிப்பீட்டு அறிக்கை வழங்கல்.
- வரிச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டுள்ள வரியொன்றாயின் அது தொடர்பாக தகவல்கள் அறிக்கையிடல்.
- வரிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரி மற்றும் தண்டம் விதித்தல் மற்றும் சுயமாக தண்டப்பணம் கணிப்பீடு
- கணனி முறைமையில் நிலுவை வரியாக காண்பித்தல்
- அரையாண்டில் ரீதியில் சமர்ப்பிக்கப்படும் நிலுவை வரி அறிக்கைகளில் பதிவு செய்தல்.
- வரிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரி அறவிடும் நடைமுறைக்கு தொடர்புபடுத்தப்பட்டு நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு இயலுமை காணப்படல். (உதாரணமாக வங்கி கணக்கினை தடைசெய்தல், ஆதனங்களை கையேற்றல், நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்தல்)

எனினும் முறைமையின் ஊடாக சுய மதிப்பீட்டை வழங்கும் இச்செயற்பாடு 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 06. 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அறிக்கை அடிப்படையில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டமையால் ஏற்பட்ட தாக்கம்

6.1 மேற்படி 5.3 பந்தியின் பிரகாரம் செயற்பாடுகள் அதே முறையில் செயற்படுத்தப்பட்ட போதிலும் 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் செயற்பாடு அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கும்

செயற்பாடு நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்தப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்களால் அறிக்கையில் நிலுவை வரி இனங்காணப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் (Manually) ஆரம்பிக்கப்பட்டது. (பின்னிணைப்பு – 9 )

சுயமாக செயற்படும் முறைமை இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்களால் தமது பொறுப்பில் காணப்படும் வரி கோவைகளுக்குரிய அறிக்கையின் பேரில் நிலுவை வரி உள்ளதாக வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன், அறிக்கையின் பேரில் செலுத்தப்படாத நிலுவை வரிக்காக தண்டப்பணம் உள்ளடக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு தரவு தயாரிப்பு மற்றும் வருமான நிர்வாக பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தரவு தயாரிப்பு மற்றும் வருமான நிர்வாக பிரிவு அம்மதிப்பீட்டு அறிக்கையை கணனி அபிவிருத்திப் பிரிவிற்கு தொடர்புபடுத்தப்படுவதுடன் அங்கு தகவல் முறைமை ஊடாக மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் மற்றும் வரி செலுத்துபவரின் கடித கோவைகள் நாளதுவரையாக்குதல் இடம்பெறும். அதன் பிரகாரம் அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக சுயமாக மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் இடைநிறுத்தப்பட்டு உத்தியோகத்தர்களால் நிலுவை வரி கணக்கிடப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை வழங்குதன் மூலம் சில நிலுவை வரி மீதிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாமை காரணமாக அவற்றின் அறவீடு / தீர்வு செய்தல் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

6.2 அதன் பிரகாரம் 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் பேரில் செலுத்த வேண்டிய வரி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யாமல் இருந்த வரி செலுத்துபவர்கள் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், அத்திகதி வரையிலும் வரி செலுத்துபவர்களுக்கு மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. (பின்னிணைப்பு – 10 ) அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்படாத / தீர்வுசெய்யப்படாத ரூபா 15,283,308,305 கூட்டுத்தொகையான VAT மற்றும் NBT வரி என்பவற்றை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை 1 அறவிடப்படாத / தீர்வுசெய்யப்படாத VAT மற்றும் NBT மீதிகள்

| வரி வகை | நிலுவை வரித்தொகை (VAT மற்றும் NBT ) |
| --- | --- |
| | ரூபா |
| பெறுமதி சேர் வரி (VAT) | 10,059,345,403 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) | 5,223,962,902 |
| **மொத்தம்** | **15,283,308,305** |

பந்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 10,059 மில்லியனான தீர்வுசெய்யப்படாத பெறுமதி சேர் வரியில் 2018 மே 04 ஆந் திகதி வரையில் ரூபா 7,485 மில்லியன் வரை தீர்வு செய்யப்பட்டுள்ளதாக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தீர்வு செய்யப்பட்டுள்ள முறை விபரமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. (பின்னிணைப்பு – 11 )

6.3 மேற்படி நிலுவை வரி நிர்வாக தகவல்கள் முறைமை ஊடாக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாமை காரணமாக வரி சட்டங்களின் (பின்னிணைப்பு – 12 ) ஏற்பாடுகளின் பிரகாரம் அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை வரி அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத் தொகை கணக்காய்வினால் அண்ணளவாக பின்வருமாறு கணக்கிடப்பட்டிருந்தது.

அட்டவணை - 2 அறவிடப்படாத / தீர்வுசெய்யப்படாத VAT மற்றும் NBT நிலுவை வரி மீதியின் மீது கணக்கிடப்பட்ட தண்டப்பணம்

| வரி வகை | மேற்படி 6.2 ஆம் பந்தியில் நிலுவை நிலுவை வரித் தொகைக்கு விதிக்கப்படாத தண்டப்பணம் |
| --- | --- |
| | ரூபா |
| பெறுமதி சேர் வரி (VAT) | 6,713,546,137 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) | 2,524,123,107 |
| மொத்தம் | **9,237,669,244** |

6.4 இந்த செலுத்தப்படாத / தீர்வு செய்யப்படாத ரூபா 24,520,977,549 கூட்டுத்தொகையான நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதி வரி நிர்வாக முறைமையின் நிலுவை வரியாக அறிக்கையிடப்படாதிருந்ததுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையிலும் இந்நிலுவை மீதிகளை வெளிப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இந்நிலுவை கொடுப்பனவை தவிர்ப்புச் செய்துள்ள வரியாக அறிக்கையிடாமை காரணமாக வரிச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கோ அல்லது தீர்வு செய்வதற்கோ திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் பலவீனங்களும்

விசேட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் பலவீனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

7.1 அறிக்கையின் பேரில் நிலுவை வரிக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் கணனி நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றும் தேவைப்பாட்டை இனங்காண்பதற்காக விடயத்துறையின் நிபுணர்களைக் கொண்டு ஆய்வு செய்ததாகவும் மாற்றம் செய்யப்பட வேண்டிய துறை தொடர்பான முன்மொழிவொன்றை தயாரித்து

திணைக்களத்தின் மேல்மட்ட முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை.

7.2 இம்மாற்றங்களுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சம்பவக் குறிப்புக்கள் பேணப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படாததுடன் எந்தவொரு உத்தியோகத்தராலும் வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரில் நிகழ்ச்சித்திட்டம் மாற்றப்பட்ட என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை.

7.3 சுய மதிப்பீட்டு அறிக்கை வழங்கல் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் தகவல்களின் பேரில் நிலுவை வரிக்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்தொடர் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று திணைக்களத்தினால் பின்பற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 8. பரிந்துரைகள்

8.1 வரி நிர்வாக தகவல் முறைமையின் நிகழ்ச்சித்திட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு முன்னர் மாற்றும் தேவைப்பாட்டை முறையான ஆய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் அதற்காக வரியியல் மற்றும் தகவல் முறைமை நிர்வாகம் ஆகிய தொழில்நுட்ப துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் பேரில் அச்செயற்பாடு மேற்கொள்ளப்படல். (தொடர்பு 7.1 ஆம் பந்தி)

8.2 வரி நிர்வாக முறைமையின் நிகழ்ச்சித்திட்டத்தில் உத்தேச மாற்றங்களுக்காக திணைக்களத்தின் உயர் முகாமைத்துவத்தின் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் (தொடர்பு 7.1 ஆம் பந்தி)

8.3 முறைமையில் காணப்படும் சிக்கல்களை இனங்காண்பதற்குரிய விடயங்கள் மற்றும் முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களுக்குரிய சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளைப் பட்டியலிடல். (தொடர்பு 7.2 ஆம் பந்தி)

8.4 வரி நிர்வாக முறைமையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாற்றங்களுக்குரிய சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்ட (மாற்றம் செய்வதற்குரிய அங்கீகாரம், மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள், மாற்றங்கள் மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் போன்ற விபரங்கள் உட்பட) சம்பவப் பதிவுகள் திணைக்களத்தின் கணனி அபிவிருத்தி பிரிவினால் பேணிச் செல்லல் (தொடர்பு 7.2 ஆம் பந்தி)

8.5 வரி நிர்வாக முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அறிவூட்டுதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பொருத்தமான நடைமுறையொன்றை தயாரித்து முறைப்படி மேற்கொள்வதாக உறுதிப்படுத்தல். (தொடர்பு 7.3 ஆம் பந்தி)

8.6 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாத/தீர்வு செய்யப்படாமல் காணப்படும் 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய VAT மற்றும் NBT அறிக்கையின் பேரில் காணப்படும் முறையே ரூபா 10,059,345,403 மற்றும் ரூபா 5,223,962,902 தொகையான நிலுவை மீதிகளுக்காக துரிதமாக மதிப்பீட்டை வழங்கி/நாட்குறிப்புக்களைப் பயன்படுத்தி நிலுவை வரியை அறவிடுவதற்கு/தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். (தொடர்பு 6.1, 6.2 மற்றும் 6.4 பந்திகள்)

8.7 வரி செலுத்துபவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையின் பேரில் (Tax on Return) உருவாகியிருந்த மேற்படி 8.6 ஆம் பந்தியின் நிலுவை வரி மீதிகளுக்காக தண்டப்பணம் கணக்கிடப்பட்டு அனைத்து தண்டப்பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். (தொடர்பு 6.3 ஆம் பந்தி)

## 9. முடிவு

9.1 முறையான அங்கீகாரமோ ஆய்வும் இன்றி வரி நிர்வாகக் கணனி முறைமையினூடாக சுய மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவது இடை நிறுத்தப்பட்டமையால் வரிக்கான இணக்கம் முறையாக இடம்பெறவில்லை என முடிவு செய்யப்படுகின்றது.

9.2 சுய மதிப்பீட்டு அறிக்கையின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அறவிடுவதற்கு / தீர்வு செய்வதற்கு இயலாது போன ரூபா 24,520 மில்லியன் வரி நிலுவை மற்றும் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு/ தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என முடிவு செய்யப்படுகின்றது.

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2018 யூன் 14